



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



## ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவம் சிறப்பு இதழ்

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை







மனிதன் தன் வாழ்க்கையில் சரியான முறையில் நடத்தி ஸந்தோஷமாக இருப்பதற்கான பல வழிமுறைகளை நம் முன்னோர்கள் உபதேசித்துள்ளார்கள். அவற்றை வாழ்க்கையில் கடைபிடித்து வருவது நல்லது. ஆனால் 'இது கலியுகம், காலப்போக்கே வேறுவிதமாக இருக்கிறது. தவறான முறைகள்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. நீதி, தர்மம் ஆகியவை இக்காலத்தில் ஒத்துவராது.எப்படியோ வாழ்க்கை நடத்த வேண்டும்' என்று சிலர் கூறுகின்றனர். இது தவறு கலியுகத்தில் தர்ம மார்க்கத்தைக் கடைபிடிக்கக் கூடாது என்று எங்கும் கூறப்பட வில்லை. இருட்டிவிடுகிறது என்பதால் இரவில் மற்றவ்யவஹாரங்களை நிறுத்திவிடுவதில்லையே! அது போல் கலியுகமாக நாம் இருந்தாலும் தர்மம், நீதி, ந்யாயம் ஆகியவற்றைக் கடைபிடித்தே தீரவேண்டும்.எல்லா யுகத்திலும் தர்மத்திற்கு ஜயமும், அதர்மத்திற்கு நாசமும் உண்டாகும் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

'அக்னி சுடும்' என்பது எல்லா யுகத்திற்கும் பொருந்தும். கலியுகத்தில் ஸௌக்யமாக இருப்பதற்கு பகவான் நாமத்தை உச்சாரணம் செய்ய வேண்டும். பகவானின் மஹிமையை அறிந்து ச்ரத்தையோடு வழிபாடு செய்ய வேண்டும். பாலைவனத்திலுள்ள நதியில் சிறிதளவு நீர் காணப்பட்டாலும் அது போற்றத்தக்கது. அதுபோலவே கலிகாலத்தில் நூற்றில் ஒருவனாவது தர்மமார்க்கத்தில் இருந்துவந்தால் அவனுடைய சிறிதளவிலான போற்றுதலுக்குரியதாகும். தர்மாசரணம் கூட

एतादृशे कलियुगेऽपि शतेषु कश्चित् जातारो जगति यः श्रुतिमार्ग एव ।
यत्किञ्चिदाचरतु पात्रमसौ स्तुतीनां श्लाघ्यं मितापमपि किं न मरो सरश्चेत् ।।
ஏதாத்3ரு’ஶே கலியுகே3(அ)பி ஶதேஷு கஶ்சித் ஜாதாரோ ஜக3தி ய: ஶ்ருதிமார்க3 ஏவ |
யத்கிஞ்சிதா3சரது பாத்ரமஸௌ ஸ்துதீனாம்’ ஶ்லாக்4யம்’ மிதாபமபி கிம்’ ந மரோ ஸரஶ்சேத் ||
நன்றி - அம்மன் தரிசனம்



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)



காணாபத்யம்


**6.** க்ஷிப்ர கணபதி:

தந்த கல்ப லதாபாஸ ரத்நகும்பாங்க குஸோஜ்வலம்
பந்தூக கமநீயாபம் த்யாயேத் க்ஷிப்ரகணாதிபம்

தந்தம், கற்பகக் கொடி, பாசம், துதிக்கையில் இரத்தினத்தால் இழைத்த பொற்குடம், அங்குசம் இவற்றுடன், செம்பருத்தி மலர் நிறத்தில் பிரகாசமான திருமேனியை உடைய க்ஷிப்ரகணபதியைத் தியானிக்கிறேன்.

**7.**விக்ந ராஜ (விஜய) கணபதி

பாஸாங்குஸஸ்வதந் தாம்ர பலவாநாகுவாஹந:
விக்நம் நிஹந்து நஸ்ஸர்வம் ரக்தவர்ணோ விநாயக:



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றுடன், மூஷிக வாகனத்தில் அமர்ந்து எல்லா இடர்களையும் களைபவராய் எழுந்தருளும், செவ்வண்ண மேனியராம் விஜய கணபதியைத் துதிக்கிறேன்.

**8.**ஸ்ருஷ்டி கணபதி

பாஸாங்குஸஸ்வதந் தாம்ர பலவாநாகுவாஹந:
விக்நம் நிஹந்து நஸ்ஸோண: ஸ்ருஷ்டிதக்ஷோ விநாயக:

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றுடன், மூஷிகத்தை வாகனமாக உடையவரும், , அனைத்து தடைகளையும் நீக்குபவருமானஸ்ருஷ்டி கணபதியைத் தியானிக்கிறேன்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)


**9.**ருணமோசந கணபதி:



பாஸாங்குஸௌ தந்த ஜம்பூ ததாந ஸ்படிகப்ரப:
ரக்தாம்ஸூகோ கணபதிர் முதேஸ்யாத் ருணமோசக:

ஸிந்தூரவர்ணம் த்விபுஜம் கணேஸம்
லம்போதரம் பத்மதலே நிவிஷ்டம்
ப்ரஹ்மாதி தேவை: பரிஸேவ்யமாநம்
ஸித்தைர்யுதம்தம் ப்ரணமாமி தேவம்

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் ஆகியவை தாங்கியவரும் வினைகளகற்றுபவரும் ஸ்படிக நிறத் திருமேனியில் ரக்த வண்ண ஆடை தரித்தவருமான ருணமோசன கணபதியைத் துதிக்கிறேன். செந்நிறம், இரண்டு கரங்கள், பெரிய திருவயிறு, ஆகியவற்றை உடையவரும், பத்மாஸநத்தில் அமர்ந்து, ப்ரஹ்மாதி தேவர்களால் ஸேவிக்கப் பெறுபவரும், சித்தர்களால் சூழப்பட்டவருமான தேவனை (விநாயகரை) நமஸ்கரிக்கின்றேன்.



**10.**டுண்டி கணபதி

அக்ஷமாலாம் குடாரஞ்ச ரத்நபாத்ரம் ஸ்வதந்தகம்
தத்தேகரைர் விக்நராஜோ டுண்டிநாம முதேஸ்துந:

ருத்ராக்ஷமாலை, கோடரி, ரத்தின பாத்திரம், தந்தம் ஆகியவை தாங்கியவரும் தடைகளகற்றுபவருமான டுண்டி விநாயகரைத் துதிக்கிறேன்.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

தூமாவதி : கைகளில் முறத்துடன் விதவை கோலத்தில் அமர்ந்திருப்பவள். வெள்ளை நிறஆடையும், நகைகள் இல்லாத விரிந்ததலையும் கொண்டவள்.

கருத்த நிறம் கொண்டவள். மயானத்தில் வாசம் செய்வதில் பிரியமுள்ளவள். விதவைக் கோலத்தில் காணப்படுகிறாள். காமம், குரோதம், அகங்காரத்தை போக்கி மகிழ்ச்சியை தந்து அருள்கிறாள். வயோதிகத்திலும் பேரருளும், பேரின்பமும் உண்டு என்பதை உணர்த்துகிறாள். அமங்கலமான தேவியாக இவள் வர்ணிக்கப்படுகிறாள். அரிய வித்தைகளின் குருவாகவும், வரங்களைத் தருபவளாகவும், தூமாவதியை கூறினாலும் வறுமை, நம்பிக்கை யின்மை ஆகியவற்றின் குறியீடாக இந்த தேவி இருக்கிறாள்.



பகளாமுகி : பயங்கர ஆயுதங்களை தாங்கியவள். எதிர்பாராத நிலையில் எதிரிகளைத் தாக்கி அவர்கள் குழப்பத்திற்கு காரணமானவள்.

ஒரு கையால் எதிரியின் நாக்கைப் பிடித்துக் கொண்டும் மற்றொரு கையால் கதாயுதமும் தரித்தவள். அசுரர்களை அழிக்க முருகனுக்கு, பரமன் 'ப்ரஹ்மாஸ்த்திரம்' என வழங்கப்படும் பகளா முகீ மந்திரத்தை அருளினார். "பீதாம்பரி, பிரம்மஸ்திர ரூபிணி" என்ற பெயரில் வணங்கப்படும் இவள், மஞ்சள் ஆடை உடுத்தி, இளம்பிறை சூடி காணப்படுகிறாள். மனதை கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவள் இவள் என்பதால் சித்தர்கள் பலர் இவளை வணங்கி பேறு பெற்றுள்ளார்கள்.

மாதங்கி : என்றும் உயர்நிலையில் இருப்பவள். நன்மையை பிறருக்கு அருள்பவள்.

மதங்க முனிவரின் மகளாக அன்னை பார்வதி தோன்றியதால் மாதங்கி என்று பெயர் பெற்றாள். சியாமளா தேவி என்றும் இவளை வணங்குகிறார்கள். நீலம்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

கலந்த பச்சை நிறத்தில் காட்சி தரும் தேவி சகல செல்வங்களையும் அருளக் கூடியவள். இவளது அருளால் ஒருவன் சகலகலாவல்லவனாகி விட முடியும்.



கமலாத்மிகா: தாமரையில் உறைபவள் என பொருள். அனைத்து சக்தியின் கிரியா சக்தியாக திகழ்பவள்.

மகாலட்சுமியின் வித்யா வடிவமே கமலாத்மிகா என்று வணங்கப்படுகிறது.இவளே திருமாலின் போக சக்தி என்று போற்றப்படுகிறாள். ஆதிசங்கரருக்கு தங்க நெல்லிக்கனிகளை வழங்கியவள் இந்த கமலாத்மிகா என்று கூறப்படுகிறது. அகில அண்டங்களை படைத்தவள் பராசக்தி. அவளை தசமஹாவித்யாவில் கமலாத்மிகா வித்யையாக பத்தாவது வடிவில் வழிபடுகின்றனர்.

தசமஹா வித்யாவில் ஒவ்வொரு சக்தியின் உருவங்கள் விளக்கப்பட்டாலும் அவர்களின் செயல்களை விளக்கவே உருவம் கொடுக்கப்பட்டுள்ளது. (தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)



`சதுரங்க சேனா நாயிகா' என்றொரு திருநாமம் அன்னைக்கு உண்டு. அதாவது லலிதாம்பிகையின் நால்வகைப் படைகளுக்கும் சேனாதிபதியாகத் திகழ்பவள் என்பது இதன் பொருள். எனவே அன்னையை வழிபாடு செய்பவர்களுக்கு எதிரிகளால் உண்டாகும் பயங்களும் பிரச்னைகளும் இல்லாமல் போகும். `வாராஹிகாரனிடம் வாதாடாதே' என்று ஒரு சொல்லாடலே முன்பு இருந்தது. காரணம் வாராஹியை வழிபடுபவர்கள் சகல வித்தைகளிலும் சிறந்து விளங்குவார்கள் என்பது நம்பிக்கை.


மஹாவாராஹி, ஆதி வாராஹி, ஸ்வப்னவாராஹி, லகு வாராஹி, உன்மத்த வாராஹி, சிம்ஹாருட வாராஹி, மகிஷாருட வாராஹி, அச்வாருட வாராஹி என்போர் எட்டு வாராஹிகள் (அஷ்டவாராஹி) என்று அழைக்கப்படுகிறார்கள்.

துன்பம் தீர்க்கும் துவாதச நாமங்கள்

பிரமாண்ட புராணம் வாராஹி தேவியின் மகிமைகளை விளக்குகிறது. பண்டாசுர வதத்துக்கு லலிதாம்பிகை புறப்படும்போது தேவி வாராஹியும் தன் கிரி சக்கரத்தில் எழுந்தருளினாள். அப்போது சுற்றியிருந்த தேவதைகள் வாராஹியை துவாதச நாமங்கள் சொல்லித் துதித்தனர். துவாதசம் என்றால் பன்னிரண்டு. இந்தப் பன்னிரண்டு நாமங்களைச் சொல்லித் துதித்து அன்னையை வழிபட்டால் சகல காரியங்களும் ஸித்தியடையும் என்கிறது பிரமாண்டபுராணம்.


1. பஞ்சமி, 2. தண்டநாதா, 3. சங்கேதா, 4. சமயேஸ்வரி, 5 சமய சங்கேதா, 6. வாராஹி, 7. போத்ரினி, 8. சிவா, 9. வார்த்தாளி, 10. மகா சேனா, 11. ஆக்ஞா சக்ரேஸ்வரி, 12. அரிக்னை என்பன அந்த நாமங்கள்

(தொடரும்...)



# Voice of Jagadguru

advaitam paramanandam an e-magazine on advaita




ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)

**5.** வஹ்னிவாஸினி



அக்னி மண்டலத்தில் உறைவதால் வஹ்னி வாஸினி. அக்னி மண்டலம் நம் உடலின் மூலாதாரத்தில் உள்ளது. அங்கு குண்டலினி வடிவாய் அம்பிகை துலங்குகிறாள். வஹ்னி என்ற பதம் மூன்று என்ற எண்ணிக்கையையும் குறிக்கும். தேவி லலிதையின் பஞ்சதசாக்ஷரி என்னும் மகா மந்திரத்தின் வாக்பவ, காமராஜ, சக்தி கூடங்களும் மூன்றே ஆகும். அழகே உருவாய் அருளே வடிவாய்த் திகழும் இவள் மஞ்சள் நிற பீதாம்பரம் அணிவதில் விருப்பமுள்ளவள். சுற்றிச் சுழலும் மயக்கும் விழிகளையுடையவள். தன் திருக்கரங்களில் தாமரை, சங்கு, கரும்பு வில், அல்லிப்பூ, கொம்பு, மலரம்புகள், மாதுளம்பழம், அம்ருத கலசம் எனத் தரித்திருக்கின்றாள்.

மந்திரம்:

ஓம் வஹ்னி வாஸின்யை வித்மஹே ஸித்திப்ரதாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்

வழிபட வேண்டிய திதிகள்:

சுக்ல பக்ஷ பஞ்சமி, கிருஷ்ண பக்ஷ ஏகாதசி.

வழிபடு பலன்கள்:

நோய்கள் தீரும். தேக காந்தியோடு, உலக இன்பங்களை பூரணமாக அனுபவிக்க இயலும்.



**6.** மஹா வஜ்ரேஸ்வரி


இந்த நித்யா ஜாலாமந்திரி பீடத்தின் அதி தேவதை. லலிதாதேவி உறையும் ஸ்ரீநகரத்தின் பன்னிரண்டாம் மதில் சுற்று வஜ்ரமணியால் ஆனதென்றும் அதற்கருகில் வஜ்ரமயமான நதியொன்று உள்ளதென்றும் அதற்கெல்லாம் அதிதேவதை வஜ்ரேஸ்வரி எனவும் துர்வாஸ மகரிஷி தன் லலிதாஸ்தவரத்னத்தில் குறிப்பிட்டுள்ளார். இத்தேவி வஜ்ரம் என்ற ஆயுத ரூபமாகவும் உள்ளாள். தங்கப் படகில் தன் பக்தரைக் காக்க வருபவள். நான்கு கரங்கள் கொண்ட இந்த அன்னை செந்நிறப் பூக்களால் ஆன மாலைகளை அணிந்துள்ளாள். வைடூரியம் பதித்த கிரீடமும், கைகளில்

பாசம், அங்குசம், கரும்புவில், மாதுளம் கனி தரித்து, கனிவான பார்வையுடன் தம் பக்தர்களைக் காக்கிறாள். அன்பர்களின் பிறவிப்பிணி தீர்க்கும் மருந்தாகி, அவர்தம் உடலும், உள்ளமும் தூய்மை பெறச் செய்யும் அதியற்புத சக்தி. கரங்களில் கங்கணங்கள் குலுங்க பொல்லாத முன் வினைகளுக்கு அஞ்சேல் என அபயமளிப்பவள்.

மந்திரம்:

ஓம் மஹா வஜ்ரேஸ்வர்யை வித்மஹே வஜ்ர நித்யாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பக்ஷ சஷ்டி, கிருஷ்ண பக்ஷ தசமி.



வழிபடு பலன்:
அனைத்துத் துன்பங்களிலிருந்தும் விடுதலை.

**7.** சிவதூதி

இந்த நித்யா தேவி சிவனைத் தூதனாகக் கொண்டவள். சும்ப நிசும்பருடன் அம்பிகை யுத்தம் தொடங்குமுன் அவர்களிடம் சிவபெருமானை தூது அனுப்பிய விவரம் தேவி மஹாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. புஷ்கரம் என்ற க்ஷேத்திரத்திலுள்ள அம்பிகைக்கு 'சிவதூதி' என்று பெயர். எட்டுத் திருக்கரங்கள், மூன்று கண்கள் கொண்ட இந்த அம்பிகையின் திருமுகம் கோடைக்காலத்து சூர்ய ஒளிபோல் மின்னுகிறது. நவரத்னங்கள் இழைத்த மகுடமும் பட்டாடையும் இவளது அழகுக்கு அழகு செய்கின்றன. தன் திருக்கரங்களில் கேடயம், அரிவாள், ஷாஷகா எனும் கோப்பை, பாசம், அங்குசம், கட்கம், கதை, தாமரை ஏந்தி அழகுடன் மிளிர்கிறாள். எல்லாவிதமான மங்களங்களையும் அன்பர்களுக்கு அளிப்பவள்.

மந்திரம்:

ஓம் சிவதூத்யை வித்மஹே சிவங்கர்யை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்: சுக்ல பட்ச சப்தமி, கிருஷ்ண பட்ச நவமி.

நமக்கு எதிரான அநீதியும் அதர்மமும் அழியும். நியாயமான கோரிக்கை எதுவும் எளிதில் நிறைவேறும். எந்த ஆபத்தும் நெருங்காது.

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்


## 2. ஸந்யாஸம்



மைஸூர் ஸம்ஸ்தானத்தை மஹாராஜா மும்மடி கிருஷ்ணராஜப் பிரபுக்கள் ஆண்டு வந்த ஸமயம் ஆஸ்தான வித்வானாக குனிகல் ராமசாஸ்திரிகள் என்ற ஒரு மஹான் இருந்து வந்தார். அவர் ஆத்மகுணங்களில் சிறந்தவராகவும், கர்மானுஷ்டான நிரதராகவுமிருந்ததுடன், சாஸ்திரங்களில், விசேஷமாக தர்க்க வேதாந்தங்களில், மிகவும் பாண்டித்யம் பெற்று பிரஸித்தராக விருந்தார். தர்க்கத்தில் 'சதகோடி' என்கிற உத்தமமான கிரந்தம் எழுதினதினால் இவருக்கு 'சதகோடி ராமசாஸ்திரிகள்' என்றே பிரஸித்தி ஏற்பட்டுவிட்டது. அந்தக் காலத்தில் தக்ஷிண தேசத்திலிருந்த தார்க்கிக வித்வான்களெல்லாரும் இவருடைய சிஷ்யர்களாகவே இருந்து வந்தார்கள்.


ஒரு ஸமயம் இம்மஹான் சிருங்கேரி ஜகத்குரு பீடாதிபத்யம் வஹித்துவந்த ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளை தர்சிக்கப் போகும்போது தன் குமாரரான சுமார் 16 வயதுள்ள லக்ஷ்மீநரஸிம்ஹ சாஸ்திரிகளையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். இப்பாலகனுடைய பாண்டித்யத்தையும் தேஜஸ்ஸையும் பார்த்து ஸ்ரீமத் ஆசார்யார் மிகவும் ஸந்தோஷப்பட்டார்கள். அவர்கள் ஸந்தோஷப்பட்ட மாதிரியில் இப்பாலகனை ஸ்ரீமடத்திற்குக் கொடுக்கும்படி கேட்பார்களோ என்ற ஸந்தேகம் ராம் சாஸ்திரிகளுக்கு ஏற்பட்டுவிட்டது. அதற்கு இடமில்லாமல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் ஊருக்கு வந்தவுடன் இப்பாலகனுக்கு விவாஹம் செய்து வைத்துவிட்டார். கொஞ்சநாள் கழித்து இவர் ஸம்ஸாரம் லக்ஷ்மியம்மாள் கர்ப்பவதியானாள். இந்த ஸமாசாரம் சிருங்கேரிக்கு எட்டியவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் "ராமசாஸ்திரி இப்பொழுது என்ன செய்வார்?" என்று கேட்டார்கள். இதிலிருந்து ஸத்யஸங்கல்பரான ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய ஸங்கல்பத்தினாலேயே இந்த ஸந்தானமேற்பட்டதாக நினைக்க இடமிருக்கிறது.

(தொடரும்...)



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஶ்ரீமந்நாராயணீயம்

### प्रथमस्कन्धपरिच्छेदः

ப்ரத$^2$மஸ்கந்த‘பரிச்சே$^2$த$^3$:

नम्राणां सन्निधत्ते सततमपि पुरस्तैरनभ्यर्थितान-
प्यर्थान् कामानजस्रं वितरति
परमानन्दसान्द्रां गतिं च ।
इत्थं निश्शेषलभ्यो निरवधिकफलः
पारिजातो हरे त्वं
क्षुद्रं तं शक्रवाटीद्रुममभिलषति
व्यर्थमर्थिव्रजोऽयम् ॥ ८ ॥
भूतात्मने नमः



நம்ராணாம்’ ஸந்நித‘த்தே ஸததமபி
புரஸ்தைரனப்‘யர்தி$^2$தான-
ப்யர்தா$^2$ன் காமானஜஸ்ரம்’ விதரதி
பரமானந்த$^3$ஸாந்த்$^3$ராம்’ க$^3$திம்’ ச |
இத்த$^2$ம்’ நிஶ்ஶேஷலப்‘யோ
நிரவதி‘கப$^2$ல: பாரிஜாதோ ஹரே
த்வம்’
க்ஷுத்$^3$ரம்’ தம்’
ஶக்ரவாடீத்$^3$ருமமபி‘லஷதி
வ்யர்த$^2$மர்தி$^2$வ்ரஜோ(அ)யம் || 8 ||
பூ‘தாத்மனே நம:

ஹரே! வணங்குபவர்களின் முன் எப்பொழுதும் இருப்பதும் கேட்கத் தெரியாதவர்களுக்கும் அவர்கள் மனதிலிருக்கும் ஆசைகளைப் பூர்த்தி செய்யும் அர்த்தங்களை எபபொழுதும் கொடுப்பதும், பரமானந் தம் நிறைந்த மோக்ஷத்தையும் அளிப்பதும், இப்படி எல்லோராலும் அடையக் கூடியதும் அளவிலாத பலனைத் தருவதுமான கற்பக விருக்ஷம் நீர்.அப்படி இருந்தும் பிரார்த்திப்பவர்களின் கூட்டம் இந்திர லோகத்தில்

ஸ்வர்க்கத்திலுள்ள அற்பமான கற்பகத்தை வீணில் விரும்புகிறது.அய்யோ கஷ்டம் !

பூ⁴தாத்மா = தூய ஆத்மா

कारुण्यात्काममन्यं ददति खलु परे स्वात्मदस्त्वं विशेषा-
दैश्वर्यादीशतेऽन्ये जगति परजने स्वात्मनोऽपीश्वरस्त्वम् |
त्वय्युच्चैरारमन्ति प्रतिपदमधुरे चेतनाः स्फीतभाग्या-
स्त्वं चात्माराम एवेत्यतुलगुणगणाधार शौरे नमस्ते ॥ ९ ॥

भूतभावनाय नमः

காருண்யாத்காமமன்யம்’ த³த³தி க²லு பரே ஸ்வாத்மத³ஸ்த்வம்’ விஶேஷா-
தை³ஶ்வர்யாதீ³ஶதே(அ)ன்யே ஜக³தி பரஜனே ஸ்வாத்மனோ(அ)பீஶ்வரஸ்த்வம் |
த்வய்யுச்சைராரமந்தி ப்ரதிபத³மது⁴ரே சேதனா꞉ ஸ்பீ²தபா⁴க்³யா-
ஸ்த்வம்’ சாத்மாராம ஏவேத்யதுலகு³ணக³ணாதா⁴ர ஶௌரே நமஸ்தே || 9 ||

பூ⁴தபா⁴வனாய நம꞉

மற்ற தெய்வங்கள் கருணையால் மற்ற பொருள்களைக் கொடுக்கிறார்கள். நீரோ ஆத்மாவையே கொடுக்கிறீர் (உம்மையே கொடுக்கிறார் என்று அர்த்தம் ). விசேஷமான ஐசுவரியத்தையும் அணிமாதி சக்திகளையும் கொண்டு உலகில் பிறரிடத்தில் ஈச்வரத் தன்மையைக் காட்டுபவர்கள் பிறர், ஆத்மாவையும் ஆள்பவர் நீர். பாக்கியம் மிகுந்த ஜீவர்கள் உம்மை நாடிவருகையில் அடிதோறும் உத்தமமான ஆனந்தத்தை உம்மிடமிருந்து அடைகிறார்கள். நீரோ பிறரிடம் எதையும் வேண்டாத ஆத்மா ராமர், ஆனந்தமே உருக் கொண்டவர். இப்படி ஒப்புவமையற்ற கல்யாண குணங்களுக்கு உறைவிடமாகிய சௌரியே! உமக்கு நமஸ்காரம்.என் வியாதி கூட்டத்தை போக்கி அருளுவீராக .

(தொடரும் ….)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்